DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 135/2024 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **சதீஸ்குமார்** |
| Huspand Name | : | **ஆண்டிக்காளை** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.03.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது வேங்கைப்பட்டியில் குடியிருந்து IDFC தனியார் வங்கியில் மேனேஜராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 சண்முகசுந்தரம் மற்றும் அ.சா.2 சாந்தி மற்றும் வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.3 சின்னம்மாள் எனது அம்மா ஆவார். சாட்சி சுப்பிரமணியன் என்பவரை தெரியும் அவர் தற்போது உயிருடன் இல்லை. கடந்த 08.10.2013 ம் தேதி காலை 11.30 மணியளவில் சிங்கம்புணரி காவல்நிலைய போலிசார் நான் தோப்பிற்கு சென்றுவிட்டு எதார்த்தமாக வந்து கொண்டிருந்தபோது எதிரி முதல் நாள் அ.சா.1 சண்முகசுந்தரம் வீட்டில் கல்லால் ஓட்டை உடைத்தது சம்மந்தமாக வந்தார்கள். அ.சா.1 சண்முகசுந்தரம் என்பவரது வீட்டை பார்த்து போலிசார் வரைபடம் வரைந்தார்கள். அதன்பிறகு கையொப்பம் போடும்படி கேட்டதால் நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன்.

என்னுடன் சுப்பிரமணியன் என்பவரும் கையொப்பம் போட்டார். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடயது தான். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தோப்பிலிருந்து வரும்போது எத்தனை போலிசார்கள் இருந்தார்கள் என்றால் ஒரு ஆய்வாளரும், ஒரு காவலரும் இருந்தார்கள். போலிசார் எதை காண்பித்தார்கள் என்றால் வீட்டை காண்பித்து கல்லையும் காட்டினார்கள். எத்தனை கல் இருந்தது என்றால் ஒரு கல் கிடந்தது. அ.சா.1 சண்முகசுந்தரத்தின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் யார் வீடு உள்ளது என்றால் அ.சா.1 சண்முகசுந்தரத்தின் சித்தப்பா ரவிச்சந்திரன் வீடு உள்ளது. அதை வரைபடத்தில் வரைந்தார்களா என்றால் ஆமாம். கல்லையும் வரைபடத்தில் வரைந்து என்னிடம் காண்பித்தார்களா என்றால் ஆமாம். பார்வை மகஜரை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம், மேற்படி விபரங்கள் பார்வை மகஜரில் உள்ளது. மறுபடியும் போலிசார் என்னை எப்போது விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் சொன்னது போல் என்முன்பு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றும் போலிசார் தயார் செய்து வைத்திருந்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அ.சா.1 சண்முகசுந்தரம் எனக்கு உறவினர் என்பதால் நானும் எனது அம்மா அ.சா.3 சின்னம்மாளும் பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.12 17:47:04 +05'30'

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**